**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.113/2022** **நாள். 06.04.2026**

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06-ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 செல்வராஜ் த/பெ.ராசப்பன்**

**2, 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் ரிக் வண்டி வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். இறந்து போன சீனிவாசன் பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். எங்களிடமும் பால் கொள்முதல் செய்துவந்தார் என்றால் சரிதான். நான் சீனிவாசனுக்கு கடன் கொடுத்ததாக சொல்லுவதை என்னுடைய வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை. சீனிவாசன் உடன் பிறந்த சகோதரியின் பெயர் கௌதமி ஆகும். கௌதமியின் கணவர் பெயர் ரங்கராஜன் என்றால் சரியாக தெரியாது. எனது மனைவி சுதாவும், கௌதமியின் கணவரும் அத்தை மகன், மாமன் மகன் என்றால் சரியல்ல. தூரத்து உறவினர்கள் ஆவார்கள்.

2) ஏலச்சீட்டு நடத்தும் போது உறுப்பினர்கள் அனைவரும் இருப்பார்கள் என்றால் சரிதான். ஏலச்சீட்டு நடத்து போது யார் அதிகம் ஏலம் கோருகிறார்களோ அவர்களுக்கு சீட்டு ஏலமிடப்படும் என்றால் சரிதான். ஏலமிட்டு தொகை கொடுக்கும் போது சீட்டு எடுப்பவர்களிடமிருந்து கடனுறுதி சீட்டு வாங்கி வைப்பது வழக்கம் என்றால் சரிதான். ஏலச்சீட்டு எனது வீட்டில் வைத்து தான் ஏலம் விடுவது வழக்கம் என்றால், என்வீட்டில்சீட்டு ஏலம் விடுவது இல்லை. சீனிவாசன் வீட்டில் வைத்து தான்சீட்டு ஏலம் விடப்படும். சீனிவாச ன் வீட்டில் ஏலச்சீட்டு நடக்கவில்லை என்றாலும், என் வீட்டில் தான் ஏலச்சீட்டு விடப்பட்டது என்றாலும் சரியல்ல.

3) நான், சீனிவாசன் மற்றும் 9 உறுப்பினர்கள் கூட்டாக சேர்ந்து ஏலச்சீட்டு நடத்தினோம் என்றால் சரிதான். ஏலச்சீட்டில் நானும், சீனிவாசனும் இருந்தோம். மற்ற உறுப்பினர்கள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. சீட்டு ஏலம் எடுத்த 6 நபர்கள் யார் என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு சீட்டு ஏலம் எடுத்த 6 நபர்கள் பெயர் தெரியும் என்றாலும், வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 12 உறுப்பினர்கள் சேர்ந்து ரூ.6,00,000/– சீட்டு நடத்தினோம். மேற்படி சீட்டு 12 மாதங்கள் ஆகும். 6வது சீட்டு நடக்கும் போது சீனிவாசன் இறந்த பின்பு, குணசேகரன் என்பவர் மீதி சீட்டுக்களை நடத்தினார். குணசேகரன் வீட்டில் சீட்டு நடக்கவில்லை என்றாலும், என் வீட்டில் தான் சீட்டு நடந்தது என்றாலும் சரியல்ல.

4) வழக்கின் கடனுறுதி சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால், என்னுடைய வீட்டில் வைத்து எழுதப்பட்டது. வழக்கின் கடனுறுதி சீட்டை சுகுமார் என்பவர் எழுதினார். வழக்கின் கடனுறுதி சீட்டை எழுதிய சுகுமார் என்பவர் எனது மனைவியின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சியான வா.சா.2 குமரவேல் என்பவர் எனது சகோதரருடன் லாரி தொழில் செய்து வருகிறார். குமரவேல் லாரி தொழில் செய்து கொண்டு, எனது கணக்கு வழக்குகளை பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. குமரவேலும், நானும் லாரி தொழில் செய்து வருகிறோம் என்றாலும், வழக்கிற்காக குமரவேலும் எனது சகோதரரும் லாரி தொழில் செய்து வருகிறார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) வழக்கின் கடனுறுதி சீட்டை சீனிவாசன் எடுத்து வந்தார். கடனுறுதி சீட்டின் 1வது சாட்சியை சீனிவாசன் அழைத்து வந்தார். கடன் தொகையை ரூ.500/– நோட்டுகளாக கொடுத்தேன். எந்த மணிக்கு என் வீட்டிற்கு சீனிவாசன் வந்தார் என்றால், 11 அல்லது 11.30 மணிக்கு இருக்கும். என் வீட்டிற்கு சீனிவாசன்

மற்றும் பழனியப்பன் ஆகியோர்கள் வந்தார்கள். இருவரும் தனித்தனியாக வந்தார்கள். வேறு யார்கள் வந்தார்கள் என்றால், சுகுமார் வந்தார். இறுதியாக குமரவேல் வந்தார். எந்த மணிக்கு கடனுறுதி தயாரிக்கப்பட்டது என்றால், சுமார் 11.20 மணிக்கு எழுதப்பட்டது. எவ்வளவு நேரம் கடனுறுதி சீட்டு எழுதப்பட்டது என்றால் சுமார் 5 நிமிடங்கள் எழுதப்பட்டது. மேற்படி கடனுறுதி சீட்டு என் வீட்டில் போர்டிகோவில் வைத்து எழுதப்பட்டது. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன இடத்திலும் வைத்து தாவா கடனுறுதி சீட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

6) மேற்படி கடனுறுதி சீட்டு சீனிவாசனால் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஏலச்சீட்டு நடத்துவதற்காக கொடுத்த கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலம் கொரோனா காலம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. சீனிவாசனுக்கு ரூ.9,00,000/- கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே ரூ.9,00,000/- கடன் கொடுத்து இருந்தால் சொத்து சம்மந்தமான ஆ ணவங்களை எழுதி வாங்கி இருப்பேன் என்றாலும், கடன் கொடுக்காததால் தான் சொத்து சம்மந்தமான ஆவணங்கள் எழுதி வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டில் 12வது வரியில் அடித்தல் உள்ளது என்றாலும், அது சம்மந்தமாக கையெழுத்து வாங்கவில்லை என்றாலும் சரிதான்.

7) மேற்படி கடனுறுதி சீட்டு சீனிவாசன் உயிருடன் இருக்கும் போது எழுதப்பட்டு இருந்தால், திருத்தம் செய்ததற்கு அவரிடம் கையெழுத்து வாங்கி இருப்பேன் என்றால் சரியல்ல. சீனிவாசன் இறந்த பின்பு சீனிவாசனின் சொத்தை அபகரிப்பதற்காக நானும், சீனிவாசன் சகோதரி கோமதி என்பவரும் சேர்ந்து தாவா புரோநோட்டை ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டுப்படி தாவா தொகை கோரி நான் தாக்கல் செய்துள்ள தாவா

தள்ளுபடி செய்யப்படி வேண்டும் என்றால் சரியல்ல. சீனிவாசன் என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும், கடன் வாங்கி இருந்தால் 2021–2022ம் வருடத்திற்கான வருமான கணக்கில் கடனை காண்பித்து இருப்பேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கை சீனிவாசனின் வாரிசுகளுக்கு எதிராக தாக்கல் செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.04.06 17:49:20 +0530

Sub Judge,
Paramathy